அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
பாவித்த 100கிறாம் வெற்றுப் பக்கட்டுகள் பத்தினைக் கொடுத்து ஒரு டம்ளரை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பாவியுங்கள்!
அண்ணா
பற்பொடி
பாவித்த 25 வெற்றுப் பக்கட்டுகளைக் கொடுத்து ஒரு அப்பியாசப் புத்தகத்தை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 18 ஞாயிற்றுக்கிழமை (04 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 08

## சந்திரிகா பேச இருந்த ஹோட்டலில் தங்கியிருந்த 4 தமிழ் இளைஞர் கைது

### ஒருவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவராம்

கொழும்பு, டிச. 4

கொழும்பு இராணுவ தலைமையகத்துக்கு அருகில் உள்ள கோல்பேஸ் ஹோட்டலில் பொலிஸார் நடத்திய தேடுதலின் போது நான்கு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த புதனன்று சிங்கப்பூரில் இருந்து வந்து அந்த ஹோட்டலில் தங்கியிருந்தார் என்று கூறப்படுகிறது.

சம்பவதினம் நீதிச் சேவை அதிகாரிகளின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவும், நீதி, அரசமைப்பு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸும் அந்தக் கூட்டத்தில் உரையாற்ற இருந்தனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு சில மணி நேரத்துக்கு முன்பாக பொலிஸார் அந்த நான்கு தமிழர்களையும் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் இருந்து வந்து ஹோட்டலில் தங்கியிருந்த பிரஸ்தாப தமிழர் தனது சிங்கப்பூர் முகவரியை பதிவு செய்திருந்தார் என்றும் ஆனால் அவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் என்பது பின்னர் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ-6)

## புலிகள் தாக்குதல் நடத்தவில்லை என்கிறார் ராணுவப் பேச்சாளர்

### கொழும்புப் பத்திரிகைச் செய்திக்கு மறுப்பு

கொழும்பு, டிச. 4

புல்மோட்டை பொலிஸ் நிலையம் கடந்த வியாழன் இரவு தாக்கப்பட்டதாக வெளிவந்த செய்தியை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலகம் மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகளினால் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதாக தஜலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்கு மறுப்புத் தெரிவித்த ராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா பத்திரிகைச் செய்தி தவறானது என்று தெரிவித்தார். (இ)

## ஐ.தே.கட்சி எம். பிக்களுக்கு ஸ்ரீகோத்தாவில் கோவை

கொழும்பு, டிச.4

ஐ.தே.கவின் புதிய தலைவரான ரணில் விக்கிரம சிங்காவின் பணிப்பின் பேரில் கட்சித் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் கட்சியின் 85 எம்.பிக்களினது பேரிலும் புதிய கோவைகள் திறக்கப்பட்டுள்ளன.

எம்.பிக்கள் தொடர்பான சகல விடயங்களும். அவர்க

(5 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வு காண்பதில் அரசு வெற்றியீட்டினால் புனர்வாழ்வுக்கு உலகவங்கி பெரும் நிதி தரும்!

## சந்திரிகாவைச் சந்தித்த பின்னர் தெற்காசிய இயக்குநர் அறிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 4

இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதித்துவரும் பிரிவினைப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சமாதான முயற்சிகளில் சந்திரிகா குமாரதுங்கா வெற்றியீட்டுவாரானால் நாட்டின் புனர்வாழ்வுக்கும், புனரமைப்புக்கும் நிதிஉதவியை வழங்க உலகவங்கி தயாராக இருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்த பின்னர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். உலக வங்கியின் தெற்காசிய இயக்குநரும், இலங்கை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பவருமான போல் ஐஸமென். கொழும்பில் கேட்போர் கூடத்தில் இந்த செய்தியாளர் மாநாடு நடைபெற்றது.

இனப்பிரச்சினைக்குச் சமாதான முறையில் தீர்வு காணும் முயற்சியாக சந்திரிகா குமாரதுங்கா எடுத்து வரும் நடவடிக்கைகளை இந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் பெரிதும் பாராட்டினார்.

நாட்டின் நிலைமை தொடர்ந்து இப்படியே இருந்தால் அது இலங்கையின் பொருளாதாரத்தையும்' உற்பத்தித்துறையையும், வேலை வாய்ப்பையும் பெரிதும் பாதிக்கும் என்றும் போல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி சந்திரிகா

## தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது கடினம்

### பி.பி.ஸி. செய்தியாளர் கருத்து

கொழும்பு, டிச. 4

உலக வங்கியின் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதாயின் மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது அரசுக்கு மிகவும் கடினமான ஒன்றாக இருக்கும்.

— இவ்வாறு பி.பி.ஸி. செய்தியாளர் அமல் ஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்குறுதிகளை அரசு செயற்படுத்துமாயின் அனைவரும் பெரும் பெருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டி வரும் என்று உலக வங்கியின் தெற்காசிய பணிப்பாளர் அரசை எச்சரித்துள்ளார். இந்நிலையில் அரசு திரிசங்கு சொர்க்க நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரியில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் போது அரசு இரு தரப்பினரையும் — உலக வங்கியையும், மக்களையும் — திருப்திப்படுத்த மிகவும் சிரமப்பட வாய்ப்புண்டு என்றும் அவர் தெரிவித்தார். (உ-ஐ-6)

## விடியோ கடையில் வைத்தே பொலிஸார் மீது தாக்குதல்

### புல்மோட்டை சம்பவத்தில் இருவர்பலி

கொழும்பு, டிச. 4

புல்மோட்டையில் இடம்பெற்ற தாக்குதலில் இரு பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர் என்று ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

வீடியோ கடை ஒன்றுக்குச் சென்றபோதே இனம் தெரியாத துப்பாக்கி நபர்கள் இரு பொலிஸ்காரர்களையும் சுட்டுக் கொன்றனர் என்றும் அவர் தெரிவித்தார் (இ)

கிழக்கில்

## கடும் மழைக்கு மத்தியில் படையினர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம்,டிச.4

கடும் மழைக்கு மத்தியிலும் அம்பாறை மாவட்டத்தில் பல தமிழ் கிராமங்களை சுற்றிவளைத்துப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அக்கரைப்பற்று கிராமத்தை கடந்த சில தினங்களுக்கு முன் சுற்றிவளைத்த இராணுவத்தினர் அப்பகுதி மக்களை தமது முகாம்களுக்கு கொண்டு சென்று விசாரித்தனர். விசாரணைகளின் போது சிலர் துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் ஏற்றம் என்னும் கிராமத்தில் தேடுதல் நடத்திய பொலிஸ் அதிரடிப் படையினர் தமிழர்கள் பலரைக் கைது செய்தனர்.

இதேவேளை—அம்பாறை மாவட்டத்தின் எல்லைப் பகுதிக் காடுகளில் படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

முச்சந்தி முரளி



அப்ப பருப்பில் இருந்து ஆயுதம் வரை கொள்வனவில் மோசடி என்று சொல்லுங்கோ..... !

## பொலிஸ் மா அதிபர் பதவிக்கு ராஜகுரு?

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுருவை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ள பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்திருப்பதாக நம்பகமாக அறிய வருகிறது.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டது.

விரைவில் பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவியேற்கவிருக்கும் ராஜகுரு பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபிராந்திய பொலிஸ்மா அதிபராக பலவருட காலம் கடமையாற்றிய ராஜகுரு, கடந்த அரசாங்க காலத்தில் சேவை நீடிக்கப்படாத நிலையில் ஓய்வு பெறுமாறு கேட்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

## ஐ. தே. கவுக்கு துணைத்தலைவர் நியமனம் இல்லை

கொழும்பு, டிச. 4

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் துணைத் தலைவர் ஒருவர் நியமிக்கப்படமாட்டார்.

கட்சியின் செயற்குழு கட்சித் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் கூடி இந்த முடிவைஎடுத்ததாக கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறளை தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

இரு வாரத்தில் இரு கண்ணிவெடித் தாக்குதல்கள்:

## ஆந்திர நக்ஸலைட் தீவிரவாதிகளுக்கு விடுதலைப்புலிகள் உதவி இருக்கலாம்!

### கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம்

கொழும்பு, டிச. 4

இந்தியப் படையினருக்கு எதிராக ஆந்திரப் பிரதேசத்தில் நக்ஸலைட் தீவிரவாதிகள் (மாவோயிஸ்ட்டுகள்) கண்ணிவெடித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி விரிவுபடுத்துவதற்கு விடுதலைப் புலிகள் உதவியிருக்கக் கூடும் என பாதுகாப்பு வட்டாரங்களில் ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் ஆந்திரப் பிரதேசத்தின் கரீம்நகரில் ரோந்து சென்ற பாதுகாப்புப் படையினர் 13 பேர் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்ததை அடுத்து இந்த ஊகம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக ''த ஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஒருவாரத்தில் இரு பெரும் கண்ணிவெடித் தாக்குதல்களை நக்ஸலைட் தீவிரவாதிகள் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தீவிரவாதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலமான

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் உணவு பொருள் தட்டுப்பாடு; உடனடியாகஇறக்குமதிசெய்ய முடிவு

கொழும்பு, டிச. 4

தென்னிலங்கையில் குறிப்பாக கொழும்பு நகரில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு இப்போதே இந்த நிலை உருவாக்கப்பட்டிருப்பதாக கொழும்பிலிருந்து இங்கு வந்தவர்கள் தெரிவித்தனர்.

சீனி, மா, பருப்பு ஆகிய பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், ஒரு கிலோ சீனி அங்கு 35 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்தியாவசியப் பொருள்களுக்கான அந்தத் தட்டுப்பாடு வர்த்தகர்களினால் செயற்கையாக உருவாக்கப்பட்டதென்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

[illegible] அரசாங்க காலத்தில் [illegible] வர்த்தகர்களே அத்தியாவசியப் பொருள் இறக்குமதி செய்துவந்தனர் என்றும்—

இப்போது அந்த வசதி தடுக்கப்பட்டதால் அவர்கள் வேண்டுமென்றே அரசுக்கு அபகீர்த்தி உண்டாக்கும் நோக்குடன் செயற்கை தட்டுப்பாட்டையும், அதனூடாக விலை உயர்வையும் உண்டாக்கி உள்ளனர் என்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வத்திக்கான் குழு கொழும்பில்

கொழும்பு,டிச.4

ஜனவரி 20,21 ஆம் திகதிகளில் ஸ்ரீலங்காவுக்கு விஜயம் செய்யும் பாப்பரசரின் வருகை தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக வத்திக்கானிலிருந்து உயர் [illegible] வந்துள்ளது.

## புதியவர்களைக் கொண்டு கட்சியை முன்னேற்றுவேன்!

### ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, நவ. 4

புதிய தலைமுறையினரின் கட்சியாக ஐ. தே. கவை நான் மாற்றப்போகிறேன். புதியவர்களிடம்பொறுப்புக்களைக் கொடுத்து அதன் மூலம் கட்சியை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லதிட்டமிட்டுள்ளேன்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் முன் கண்ட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணம் அனுப்புவதாக கூறி பருப்பு வாங்க போலிப் பத்திரங்கள்

### கொழும்பில் சிலர் கைது

கொழும்பு, டிச. 4

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திடமிருந்து 20 ஆயிரம் கிலோ பருப்பை கொள்வனவு செய்வதற்கு போலிப் பத்திரங்களைச் சமர்ப்பித்த சிலர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

கொழும்பிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் மக்கலம் களஞ்சியத்தில் இந்த பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கு பருப்பை அனுப்புவதாகக்கூறி இந்தப் போலிப் பத்திரங்களை அவர்கள் சமர்ப்பித்திருந்தனர்.

கோட்டை பொலிஸார் தொடர்ந்து [illegible] நடத்திவருகின்றனர். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறைற் கல்வி நிலையம்

10, சட்டநாதர் வீதி, நல்லூர்.

**கல்வி ஆண்டு - 1995**

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையிலான வகுப்புக்கள்

**ஆரம்பம்: 05 - 12 - 1994**

பி. ப. 4-00 மணி

புலமைப் பரிசில் வகுப்புக்கள் 10 - 12 - 1994இல் ஆரம்பமாகும்

(34014)



## தமிழ் சாகித்திய விழா - 1995

# சிறந்த நூல்களுக்கு பரிசளித்தல்

1993 ஜனவரி 1ஆம் திகதி முதல் 1993 டிசம்பர் 31 ஆம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட) வெளிவந்த நூல்களின் ஆசிரியர்கள், வெளியீட்டாளர்களிடமிருந்து சாகித்திய நூற் பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நூலாசிரியர் இலங்கையராய் இருப்பதுடன் நூல் இலங்கையில் அல்லது இந்தியாவில் பிரசுரிக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும். முத்திரை ஒட்டப்படாத சுய முகவரியிடப்பட்ட தபாலுறை ஒன்றை அனுப்பி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரிசுத் தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் ஐந்து பிரதிகளையும் அஞ்சல் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைகுக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**விண்ணப்ப முடிவு திகதி 1994 டிசம்பர் 31**

வெளிநாட்டு விண்ணப்பதாரர்கள் தாமாகவே தயாரித்த விண்ணப்பத்துடன் 1994 டிசம்பர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக தமது நூலின் ஐந்து பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.

க. சண்முகலிங்கர்,
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்களம்.

9 ஆவது மாடி,
'நக்ஷணமந்திரய'
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02.

[சி-9757]



# புதிய நாவலர் கல்வி நிலையம்

நாவலர் வீதி, ஆனைப்பந்திச் சந்தி,
யாழ்ப்பாணம்.

**கல்வி ஆண்டு - 1995**

ஆண்டு 3 முதல் O/L வரை

ஆரம்பம்: **05 - 12 - 1994**

திங்கள் பிற்பகல் 3 மணி

**G. C. E. O/L**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு இரா. செல்வவடிவேல் |
| சமூ. கல்வி | — | திரு. K. S முத்துலிங்கம் |
| கணிதம் | — | திரு. B கிருபாகரன்<br>திரு. T. S குணாளன் |
| தமிழ் | — | திரு N. புவனேந்திரன் |
| ஆங்கிலம் | — | திரு. PON சௌத்திரி |
| வர்த்தகம் | — | திரு V. N. ராஜன் |
| சமயம் | — | திரு. N. சதீஸ் |

- ★ முதல் 8 மாதத்திற்குள் பாடத்திட்டம் முடிக்கப்படும்.
- ★ கணிதம், விஞ்ஞானம் கிழமையில் 4 வகுப்புகள்
- ★ ஒவ்வொரு மாணவர் மீதும், அந்தந்த பாட ஆசிரியரின் முழுக் கவனிப்பு மேற் கொள்ளப்படும்.
- ★ உங்கள் அனுமதிகளை 15-12-94க்கு முன் உறுதி செய்து கொள்ளவும்.

ஆண்டு 3 முதல் O/L வரை

கல்வியாண்டு 1995இல் கற்க இருக்கும் மாணவர்களின்...

## பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

இடம்: புதிய நாவலர் கல்வி நிலையம்

காலம்: **04-12-94** (ஞாயிறு)

நேரம்: பிற்பகல் 3 மணி

★ கல்வியை இடையில் நிறுத்திய மாணவர்கள் புதிய அனுமதி பெற விரும்பின் அம் மாணவர்களின் பெற்றோர்களும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளவும்.

- நிர்வாகி.

(சி/9855)



# MATHS CENTRE

NELLIADY.

95ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்கள்

ஆண்டு 5, 6, 7, 8, 9, 10, 11

**ஆரம்பம்: 05 - 12 - 1994**

திங்கள் 3-00 p. m.

✶ விசேட புலமைப் பரிசில் வகுப்பு அனுபவமுள்ள ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

(33963)



பரீட்சை பெறுபேறுகளில் சாதனை மட்டுமல்ல மாணவரின் மீத்திறன், ஆளுமை விருத்தியினை தனியார் கல்வி நிலையங்களிலும் ஏற்படுத்தலாம் என நிறுவும் நிறுவனம்

# றேடியன்ற் கல்வி நிலையம்

புங்கன்குளம், யாழ்ப்பாணம்.

**புதிய கல்வி ஆண்டு - 1995**

ஆண்டு 5 முதல் O/L வரை

**ஆரம்பம்: 10-12-1994**

சனி காலை 9 மணி

T. S.S. மோகன் A. மீரா, K. S. முத்துலிங்கம், S. K. மகாலிங்கம், B. கிருபாகரன், R. கருணாகரன்

ஆகிய யாழ் முன்னணி ஆசிரியர்களுடன் ஏனைய பல ஆசிரியர்களும் இணைந்து புதிய ஆண்டில் உற்சாகமாக காலடி வைக்கின்றனர்.

✶ நடைபெறுகின்றது **A/L 95, 96** தமிழ்

ஆசிரியர்: திருமதி A. மீரா

(34009)


## ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 1994

சாவகச்சேரி யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்யாலயத்தில் ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 23 மாணவர்கள் தோற்றி 07 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

| பெயர் | புள்ளிகள் |
|---|---|
| செல்வி சோபிகா பாலச்சந்திரன் | — 168 |
| செல்வி மைதிலி ஞானகுரு | — 167 |
| செல்வி ஜெயரூபி தெய்வேந்திரமூர்த்தி | — 158 |
| செல்வி வத்சலா சிவலிங்கம் | — 150 |
| செல்வி சுவேதா கணபதிப்பிள்ளை | — 144 |
| செல்வி பிரவீனா சிவஞானசுந்தரம் | — 143 |
| செல்வி தயாழினி சிவபாலன் | — 142 |

இம் மாணவர்களைப் பாராட்டுவதுடன், இம் மாணவர்களுக்கு ஆண்டு - 1 இல் இருந்து வகுப்பு ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி வதனகுமாரி பரமசிவம் அவர்களையும், இவ்வாசிரியரைத் தந்துதவிய கல்விக் கழகத்தினரையும், பாடசாலை அதிபர் திரு கு. கதிர்காமசேகரர் அவர்களையும் பாடசாலை அபிவிருத்திச் சபை பாராட்டுகின்றது.


குறிப்பு:

தென்மராட்சிக் கோட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக இப்பாடசாலையே அதி கூடிய வீதத்தில் மாணவர்களைச் சித்தியடையச் செய்த பெருமையையும், 1993இல் செல்வி சிவானந்தினி சிவராசா 181 உச்சப்புள்ளி பெற்ற சாதனையையும் பெற்றுக்கூறியது.

கா. சிவஞானசுந்தரம்,
செயலாளர்.
மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சபை.

[34007]


## 9-ம் ஆண்டு நினைவுகள்



தோற்றம்: 14 — 12 — 1924

மறைவு: 04 — 12 — 1985

**அமரர் E. K. சண்முகநாதன்**

(ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்)

என்றும் முகத்தில் சிரிப்பதனை ஏற்றி வைத்து
துன்பம் வரும் போதெல்லாம் துச்சமாய் -
ஏற்று நின்று
தன்னலங்கள் கருதாத தலைவன் நீங்கள்...
திரும்பாத உங்கள் பிரிவெமக்கு நஞ்சாகும்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வண்...டீ

(33984)


## புலிகளின் குரல் வானொலியில்

**04 — 11 — 1994**

**ஞாயிறு இரவு**

- ★ 8-01 — இசையரங்கம் — பாடுபவர், திரு. பி. குலசிங்கம்
- ★ 8-20 — தாயகப்பாடல்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் — பொன். கணேசமூர்த்தி எழுதும் ''இலங்கைமண்'' 49ஆம் அங்கம்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**05 — 12 — 1994**

**திங்கள் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 07-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

## நல்லூர் பிரதேச செயலக ஊழியருக்கு

யாழ்ப்பாணம், டிச. 4

நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமை புரியும் அனைத்து அலுவலர்களையும் இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் சமூகம் தரும்படி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

## பரீட்சை நிலையங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 4

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஜி.சி.ஈ. (சாதாரண)தர பரீட்சைக்கான பரீட்சைநிலைய மண்டபங்களில் மேலும் இரண்டு மாற்றப்பட்டுள்ளன.

யாழ். சென்ஜோன்ஸ் அக்கடமி மண்டப இலக்கம் 2 சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் —

யாழ். இந்து ஆரம்பபாடசாலை மண்டப இலக்கம்-2 பிறவுண்வீதியிலுள்ள புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கும் — மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)


## பகுதி நேர விரிவுரையாளர் - 1995

தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்

1994-11-11-ந்திகதி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, 1995ஆம் கல்வியாண்டுக்கு பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் 1994-12-20-ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விவரங்களைத் தொழில் நுட்பக் கல்லூரியில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மேற்படி திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

க. ஜெயரட்ணம்
அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி வீதி,
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

(சி-9853)



உ

விநாயக விரத 20ஆம் நாள்

**7 — 12 — 1994** புதன்கிழமை

## கஜாமுகாசுர சங்காரம்

- ★ பி. ப. 4 மணிக்கு மங்கள இசை.
- ★ மாலை 5 மணி வசந்தமண்டபப் பூசையாகி விநாயகப் பெருமான் சங்காரஞ் செய்யப் புறப்படல்.

**8 — 12 — 1994** வியாழக்கிழமை

## விநாயக விரத பூர்த்திவிழா

- ★ காலை 8-30 மணி விநாயகர் சிவலிங்க பூசைக் காட்சி.
- ★ மு. ப. 10 மணி முதல் நவோத்திர சத சங்காபிடேகம், விசேட திரவிய ஹோமம், விசேட பூசை ஆகியன நடைபெறும்.

— தர்மகர்த்தா.

வண்ணை ஸ்ரீ வைத்திஸ்வரன் கோயில்,
வண்ணார்பண்ணை.

[சி-9927]



# BRILLIANT INSTITUTE

சங்கத்தானை, சாவகச்சேரி.

**கல்வி ஆண்டு - 1995**

புதிய வகுப்புக்கள்

**ஆரம்பம்: 05 - 12 - 1994**

பிற்பகல் 2-00 மணி


ஆண்டு 5 முதல் O/L வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன.

✶ A/L கணக்கியல், வர்த்தக வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(34023)



# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்



| செல்வி | செல்வன் | செல்வன் |
|---|---|---|
| கீதா இராசசுந்தரம் | இராசசுந்தரம் யசோதரன் | இராசசுந்தரம் சிவகரன் |
| தோற்றம்: 26-12-1969 | தோற்றம்: 22-04-1973 | தோற்றம்: 05-11-1976 |

அநியாய அழிப்பு: 26 — 11 — 1992

**திதி: 04 - 12 - 1994**

எமதன்புத் தெய்வங்களே! ஆருயிர்ச் செல்வங்களே!
ஓடியதே ஆண்டு இரண்டு உமைப்பிரிந்து
ஆறவில்லை உங்கள் நினைவுச் சிதறல்கள்
வானத்தில் வந்த விமான மொன்று வட்டமிடாமலே
போட்டதுவே குண்டு இரண்டை பங்கரின் மேல்
பாசத்தின் பிணைப்போடு பதுங்கியிருந்த குஞ்சுகளை
பதை பதைக்க வதை செய்தனவோ
இளம் தளிர்கள் நான்கினிலே மூன்றும் கருகினவே
இன்னுமொன்று மிஞ்சியது பெற்றவர்க்கு தஞ்சமென
இன்று அவன் இல்லையெனில் வாழ்வதில் தான் அர்த்தமென்ன?
உங்கள் ஆத்மாக்கள் சாந்தியடையட்டும்!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்;

அப்பா, அம்மா, சகோதரன் இரவி,
உறவினர்கள், நண்பர்கள்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

[34027]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலில் இராணுவ ஆட்சி பிரகடனம்; பின் புதிய அரசமைப்பு அமுலுக்கு!

## நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க சந்திரிகாவுக்குள்ள ஒரே வழி இதுதான்

**அரசமைப்பு விவகாரம் குறித்து ஓர் அலசல் - 2**

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையும் அதற்கு வழி செய்யும் தற்போதைய அரசமைப்பையும் மாற்றுவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசும் தீர்க்கமான முடிவு எடுத்திருப்பதையும்—

பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. அல்லது அதில் உள்ள கணிசமான எம். பிக்கள் இந்த முடிவை ஆதரிக்காவிட்டால், தற்போதைய அரசமைப்பை அதன் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு மாற்றியமைப்பது சந்திரிகா அரசுக்கு இயலாத காரியமாக இருக்கும் என்பதையும்—

இக் கட்டுரைத் தொடரின் முதல் அத்தியாயத்தில் பார்த்தோம்.

தற்போதைய அரசமைப்புக்கு முரணான வகையில் செயற்பட்டு, அதனை ஒழிப்பதே சந்திரிகாவுக்கு உள்ள ஒரே வழி என்பதையும் கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டோம்.

அது எப்படி அமையக்கூடும் என்பதை இந்த அத்தியாயத்தில் ஆராயலாம்.

### இராணுவப் புரட்சியால் ஆட்சிமுறை மாற்றம்

சாதாரணமாக ஒரு ஜனநாயக நாட்டில் திடீர் இராணுவப் புரட்சி ஏற்பட்டால், ஆட்சியைக் கைப்பற்றும் புரட்சிக் குழு அல்லது அதன் தலைவர் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து, நாட்டில் அமுலில் இருக்கும் அரசமைப்பைத் தூக்கி வீசுவதாக அறிவிப்பது வழக்கம்.

உலக நாடுகளில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பல இராணுவப் புரட்சிகள் இதற்கு உதாரணமாகும்.

இவ்வாறு அமுலில் இருக்கும் அரசமைப்பு, ஆட்சிக்கு வரும் — படை அதிகாரம் மிக்க — ஆட்சியாளர்களால் தூக்கி வீசப்பட்டதும்—

பின்னர் அந்த ஆட்சியாளர்களின் விருப்பத்துக்கு இணக்கமான அரசமைப்புகள் அந்த ஆட்சியாளர்களால் அங்கு அறிமுகப்படுத்தப்பட்டதும் சர்வதேச நடப்பில் பலமுறை சந்திக்கப்பட்ட சம்பவமாகும்.

### சந்திரிகாவுக்குள்ள அதிகாரங்கள்

ஸ்ரீலங்காவிலும் ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி, நாட்டின் தலைவரும், நிறைவேற்றுத் துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும் என்பதோடு ஆயுதந் தாங்கிய படைகளின் படைத் தலைவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது ஜனாதிபதி சந்திரிகா, ஸ்ரீலங்கா அரசின் தலைவர் என்பதோடு முப்படைகளினதும் பிரதம தளபதிஎன்ற படைத்துறை அதிகாரத்தையும் கொண்டவராக இருக்கிறார்.

வேறு வகையில் கூறுவதானால் —

முப்படைகளும் தமது முழுக் கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதி செய்து கொண்டு, நாட்டில் ஓர் இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தக் கூடிய அதிகாரமும் வாய்ப்பும் உள்ள ஓர் உயர் பதவியில் அவர் இருக்கிறார்.

தேவைப்பட்டால் தற்போதைய அரசமைப்பு இடைநிறுத்தப்படுவதாகவும், தமது தலைமையில் இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்படுவதாகவும் ஓர் அறிவிப்பை அவர் விடுக்க முடியும்.

### புதிய அரசமைப்பு

இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தி இராணுவ ஆட்சிக் குழுவின் தலைவராக தாம் இருந்து கொண்டு, ஒரு குறுகிய காலத்தினுள்— அது இராணுவ ஆட்சி அமுலுக்கு வந்து ஒரு சில நிமிட நேரமாகக் கூட இருக்கலாம் — தமக்கு விரும்பிய புதிய அரசமைப்பை அவர் அமுலுக்குக் கொண்டு வருவதாக அறிவிக்க முடியும்.

அந்த அறிவித்தலுடன் அது வரை ஒரு குறுகிய காலத்துக்கு அமுலில் இருந்த இராணுவ ஆட்சி அற்றுப்போக, புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும்; அந்த அரசமைப்பின் கீழான ஜனநாயக ஆட்சியும் செயற்படத் தொடங்கும்.

அந்தப் புதிய அரசமைப்பில் —

இராணுவ ஆட்சிக்கு முன்னர் இருந்த அரசமைப்பின் கீழ் (அதாவது தற்போது அமுலில் இருக்கும் அரசமைப்பின் கீழ்) ஜனாதிபதியாக இருந்தவர் புதிய அரசமைப்பின் கீழ் பிரதமராகப் பணிபுரிவார் என்றும் —

முன்னர் செயற்பட்ட நாடாளுமன்றம் தொடர்ந்து புதிய நாடாளுமன்றமாகச் செயற்படும் என்றும் —

நாடாளுமன்றத்துக்கு பதில் கூறவேண்டிய பிரதமர் தலைமையிலான — வெஸ்மினிஸ்டர் பாணி — ஆட்சிமுறையை நாடு கொண்டிருக்கும் என்றும்—

இனிமேல் தேர்தல்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் இல்லாமல், தொகுதிவாரியான உறுப்பினர்கள் தெரிவு முறையைக் கொண்டதாக இருக்கும் என்றும் —

— தெரிவிக்கப்பட்டிருந்தால், புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்ததும் சந்திரிகாவும் அவரது கட்சியினரும் விரும்பும் - பிரதமர் தலைமையிலான — வெஸ்மினிஸ்டர் பாணி — ஆட்சி முறையும் நடைமுறைக்கு வந்துவிடும்.

இதுதான் தற்போதைய அரசமைப்பை மாற்றுவதற்கு சந்திரிகா கையாளக்கூடிய ஒரே வழியாக — இலகு வழியாக— இருக்கப்போகின்றது.

### தெரிவுக்குழுவின் சிபாரிசு

அரசமைப்பு விவகாரம் தொடர்பாக நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுகூடி, ஆராய்ந்து, தயாரித்து, சிபாரிசு செய்யும் புதிய அரசமைப்பு நகல் தனது கைக்குக் கிடைத்ததும்—

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய, புதிய அரசமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு தமக்கு முடியாமல் போகும் போது, மேலே கூறிய திட்டத்தைச் செயற்படுத்துவதுதான் சந்திரிகாவுக்கு உள்ள ஒரே வழியாக இருக்கப்போகிறது.

### தடுக்க முடியாதா?

இத்தகைய வழியை ஜனாதிபதி சந்திரிகா நாடுவாரானால் இரண்டு கேள்விகள் எழுகின்றன.

ஒன்று—

தற்போதைய அரசமைப்புக்கு விசுவாசமாக, அதனைப் பேணி, போற்றிப் பாதுகாப்பேன் என சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற சந்திரிகா, அதற்கு முரணாக — அதனைமீறி — அதனைத் தூக்கி எறிந்து — செயற்பட முயல்வதை தற்போதைய அரசமைப்பினால் கட்டுப்படுத்த அல்லது அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் ஜனாதிபதியைத் தடுக்க அல்லது தண்டிக்க முடியாதா?

மற்றையது—

இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தி, அதன் கீழ் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்பையும், அரசாங்கத்தையும் உலக நாடுகள் அங்கீகரிக்குமா? அரசமைப்புக்கு முரணான வகையில் அரசமைப்பை ஒழிப்பதற்கு சந்திரிகா அரசு முயற்சிக்குமானால் சர்வதேச சமூகத்தின் முன்னால் அது நம்பகத்தன்மையை இழந்துவிடும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டது போல, சந்திரிகா அரசு சர்வதேச உலகின் முன் நம்பிக்கையை இழந்துவிடாதா?

தாம் விரும்பிய நேரத்தில் அரசமைப்பையே தூக்கி வீசக் கூடிய — இராணுவ, அரசியல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் மிக்க — நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படமுடியாத அளவுக்கு சட்டத்தின் முன் உயர்ந்த வலிமையுடன் ஒருவர் ஜனாதிபதி பதவியில் இருப்பதற்கு, அப் பதவியை உருவாக்கித் தந்திருக்கும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

**-வித்தி-**


# குமரன் கல்வி நிலையம்

நவாலி வடக்கு, மானிப்பாய்.

ஆண்டு 2 முதல் O/L வரை

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: **04-12-1994**

ஞாயிறு காலை 9-00மணி

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — P. தயாநிதி |
| கணிதம் | — R. ரட்ணவேல் |
| | Miss. T. பத்மா |
| ஆங்கிலம் | — பொன். சௌந்திரி |
| தமிழ் | — J. கோகலே |
| சமூக-வரலாறு | — G. உதயரூபன் |
| வர்த்தகம் | — V. திருப்பதி |
| சமயம் | — Mrs. T. சிவராஜேஸ்வரன் |
| | Miss V. சுகந்தினி |

[சி-9861]


## கண்ணீர் அஞ்சலி



**கதிரமலை கந்தசாமி**

(கிராம சேவையாளர் — வண். வடக்கு)

எமது செயலகத்தில் கடமை புரிந்த கதிரமலை கந்தசாமி அவர்கள் திடீரென எம்மை விட்டுப் பிரிந்ததையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும், துயரமும் அடைகின்றோம். அன்னார் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அலுவலகர்கள்,
நல்லூர் பிரதேச செயலகம்.

(34024)


# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், அரச/அரசசார்பற்ற நிறுவனங்களும்

## இணைந்து நடத்தும்

# 4ஆவது வதிவிட வேளாண்மைப் போட்டி - 1994/1995

## யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது அந்நிய ஒடுக்கு முறைகளிலிருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழிவகுத்துள்ளது. இப்பணியில் செயல்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயல் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகின்றது. இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் முகமாகவும் நான்காவது முறையாக 1994/95 காலப்பகுதியில் யாழ். குடா நாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபட வைக்கவும் வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### போட்டிக்கான நிபந்தனைகள்

01. வீட்டுடன் அமைந்துள்ள 4 பரப்பிற்குட்பட்ட காணியில் வேளாண்மை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
02. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ற வதிவிட பயிர் செய்கையை கவர்ச்சியாக அமைத்தல். 10 அடி நீளம், 3 அடி அகலமுமான பாத்திகளின் உள்நாட்டு மரக்கறிப் பயிர்களான வெண்டி, மிளகாய், புசிற்றோவா, பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு அவரை போன்றவற்றையும் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களான போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீட்றூட், கரட், போன்றவற்றையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகைப் பயிரினங்களில் மூன்று உள்நாட்டு மரக்கறிப்பயிர்களும் இரண்டு மேல்நாட்டு மரக்கறிப்பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும். அத்துடன் மரவெள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைப்பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும். சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்.
03. 10 அடி நீளமும், 3 அடி அகலமுமான பாத்திகளில் இலைவகைகள், மரக்கறிப் பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, கங்கூன் கீரை, வல்லாரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை, ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாவது இருத்தல் வேண்டும்.
04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், கருவேப்பிலை, றம்பை போன்ற இனங்களில் மூன்று நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
05. பழமரங்களான பப்பாசி, வாழை, மரக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற்றுள் நான்கு மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது கமுகு இரண்டு ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
07. கூட்டெரு குழிமுறையிலோ அல்லது குவியல் முறையிலோ மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
08. தேனீ வளர்த்தல் குறைந்தது ஒரு பெட்டியிலாவது அல்லது மரக்கொட்டுகளிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
09. கோழி வளர்த்தல் குறைந்தது பத்து கோழிகள் (கூடு அமைப்பு) அல்லது தனகூல முறையில் வளர்த்தல் வேண்டும்.
10. தாரா ஒரு சோடி வளர்த்தல் வேண்டும். அல்லது அதற்குப் பதிலாக ஐந்து கோழிகள் கூடுதலாக வளர்க்கப்படல் வேண்டும்.
11. பசுமாடு ஒன்று அல்லது மறியாடு ஒன்று வளர்க்கப்படல் வேண்டும். இவை இரண்டினையும் வளர்ப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.
12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.
13. விலங்குத் தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள் முருங்கை, சீமைக்கிழுவை என்பன இருத்தல் வேண்டும்.
14. பதிவேடு பேணல் - மரக்கறிப்பயிர், கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப்படல் வேண்டும்.
15. போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் விறகுத் தேவைக்கான மரங்கள் நட்டுப் பராமரிக்கப்படல் வேண்டும். இதற்கான மரங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு பகுதியால் இலவசமாக வழங்கப்படும். இதற்கான புள்ளியும் பிரத்தியேகமாக இடப்பட்டு போட்டித் தெரிவில் கணிக்கப்படும்.

### குறிப்பு:

01. மேலதிகமாக தேவைப்படும் விவரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கோட்ட, வட்ட செயலகங்களின் கிராமிய உற்பத்திக் குழுக்கள், விவசாயப் போதனாசிரியர்கள், கிராம சேவை அலுவலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
02. இப்போட்டியில் கலந்து கொள்வோர் 01-10-94 தொடக்கம் 31-01-95 வரையுள்ள காலப் பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருப்பதோடு விலங்கு வேளாண்மை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
03. போட்டிகள் பார்வையிடும் காலம்
    - முதலாம் கட்டம் பார்வையிடுதல் 20 — 01 — 95 தொடக்கம் 31 — 01 — 95 வரை
    - இரண்டாம் கட்டம் பார்வையிடுதல் 15 — 02 — 95 தொடக்கம் 25 — 02 — 95 வரை
    - மூன்றாம் கட்டம் பார்வையிடுதல் 10 — 03 — 95 தொடக்கம் 15 — 03 — 95 வரை
04. விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவங்கள் கிராமிய உற்பத்திக் குழு அலுவலகங்களில் கிராம சேவையாளர் அலுவலகங்கள், கமநல சேவைத் திணைக்களம், அரச / அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் பெற்று, 30-12-94இற்கு முன் மேற்படி விண்ணப்பங்கள் பெற்று அதே அலுவலகங்களில் நேரடியாக கையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

[சி-9857]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3, 4 அங்குல எஸ்-லோன் பைப்புகள், பொலித்தீன் தாள் சகல அளவுகளிலும் சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் அலுமினியம் தாச்சிகள், எனாமல் பெயின்ற் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், 213 C, மருத்துவமனை வீதி (கிட்டு சாலை), யாழ்ப்பாணம். [33981]

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரஞ்சித், இல. 16 (44), மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (சி-9797)

ஒரு சனன் ஆடும், யமுனாபாரி கிடாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 2, திருவள்ளுவர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (34015)

அழகிய கறுப்புநிற பொமனேரியன் ஆண் நாயும் குட்டிகளும், சடை முயல்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. எம். பாக்கியநாதன், மோகன் வீதி, கோண்டாவில் மேற்கு. (34012)

### இறைச்சிக் கோழி

Broiler இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [34019]

### அஷ்டலஷ்மி

அஷ்டலஷ்மி கலண்டர்கள் விற்பனையாகின்றன. அஷ்டலஷ்மி தினத்தாள் கலண்டர்கள் ரூபா 70/- பஞ்சாங்க கலண்டர் ரூபா 40/-. மேலதிகமான பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளாதீர்கள். பதிப்பாளர்: சிவா பிறிண்டேர்ஸ், கைதடி. (8054)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima, Christhomber புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (33987)

### நீமியா உரம்

நெற் பயிரில் பூச்சிகளின் தாக்கத்தை அகற்றவும், அமோக விளைச்சலுக்கும் சிறந்த இயற்கை உரம்; "நீமியா உரம்". தொல்புரம் கமநலசேவை நிலையத்திலும் விற்பனைக்குள்ளது பாவித்து பயன் பெறுங்கள். — மில்க்வைற். (சி-9856)

### விற்பனையாகின்றது

சீவம் கலண்டர்கள், பொக்கற் கலண்டர்கள், வியாபாரத்திற்கு அடித்து கொடுப்பதற்குரிய சகல கலண்டர்களும், டயறி வகைகளும் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. ஸ்ரீகாந்தா புத்தக சாலை 165, மின்சார நிலையம், தலைமையகம்-மக்மிலன் யாழ்ப்பாணம். (சி-9908)

### பொக்கட் கலண்டர்கள்

1995 பொக்கட் கலண்டர்கள், பெரிய பட கலண்டர்கள், சினிமா பாடல் கொத்து, நத்தார் வாழ்த்து மடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகிறது. ராஜன் பொத்தக சாலை, 12, பழைய பேருந்து நிலையம், யாழ்ப்பாணம். [33913]

### மணமகன் தேவை

யாழ். இந்து, 34 வயது, A/L சித்தியடைந்த ஒரளவுக்கு CIMA படித்த தற்போது கொழும்பில் பிரபல நிறுவனம் ஒன்றில் Accounts Clerk ஆக வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: இல. 725, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (33960)

### இலகு திருமண சேவை

27 வயது, உத்தரட்டாதி, செவ்வாய் - 7, ஜேர்மனியில் வதிவிட உரிமையுள்ளவருக்கு தற்பொழுது யாழ்ப்பாணத்தில் மணப்பெண் தேவை. மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில், து. விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [34016]

### கணிதம் / ஆங்கிலம்

எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் (வீவிலும்) இப்பாடங்களில் முன்னேற 40 வருட அனுபவமுள்ள B.Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, மணல்தறை லேன், திருநெல்வேலி. (33998)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சுவர், மேசை மணிக்கூடுகள் உட்பட அனைத்து எலக்ரோனிக் மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்தி தரப்படும். பழைய மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். றீகன் வாச் வேக்ஸ், 113, பலாலி வீதி, கந்தர்மடம். (சி-9916)

### தேடுகின்றனர்

Holland நாட்டவர் பேனா நண்பர்களை தேடுகின்றார்கள். தொடர்புகளுக்கு: Mr. Tor. Duin Doon Str.- 163, 4827 Bread, Holland, Mr. Sony, Roggeveen Str. -5, Dongen, Holland. [33935]

### பயிற்சி வகுப்புக்கள்

கேக்ஐசிங், சமையற்கலை, ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும் டிசம்பர் விடுமுறையில் ஒரு மாத கால வகுப்புக்கள் 5-12-94 முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் உடன் தொடர்பு: Yogi Home Science Academy, 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (சி-9771)

### பழைய சேலைகள் தேவை

பாவித்த நைலெக்ஸ் சேலைகள் விலைக்கு வாங்கப்படும். தொடர்பு: தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 83/2, காங்கேசன்துறை சாலை, கொக்குவில் மற்றும் எமது பிரிவுக் காரியாலயங்கள் சுன்னாகம், பருத்தித்துறை, நாகர்கோவில், பளை, சாவகச்சேரி, பண்டிதர் குடியிருப்பு. [33912]

### மணமகள் தேவை


ஐரோப்பிய நாட்டில் பிரசாவுரிமை பெற்றவரும், வயது 31, செவ்வாய் தோஷமுள்ள மீண்டும் விரைவில் ஐரோப்பா திரும்பவுள்ளவருக்கு பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர். தொடர்பு: சு. வினாசித்தம்பி, உசன், மிருசுவில். (33934)

### விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

---

## 31-ம் நாள் நினைவு தினம்



### திருமதி மேரி மாக்கிறட் பாலசிங்கம்

புவியில்: **29 — 06 — 1943**

மகிமையில்: **05 — 11 — 1994**

"நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (11 தீமோ 4;7)

**9 — 11 — 1994** இல் நடைபெற்ற அன்னாரின் நல்லடக்க ஆராதனையில் பங்கு பற்றி, பலவழிகளிலும் உதவி புரிந்து, மலர்வளையம் சாத்தியும், நேரிலும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆவது நாள் நினைவு தின ஜெப ஆராதனை நாளை **05 — 12 — 1994** திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து, இவ்வாராதனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பெற்றோர், பிள்ளைகள், மருமக்கள், சகோதர, சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.

678/ 33, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (33982)

---

## விஜியோர் அக்கடமி

(குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.)

ஆண்டு 4 முதல் O/L வரை புதிய பிரிவுகள்

ஆரம்பம்: **04-12-1994** (ஞாயிறு காலை 9 மணி)

(33958)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**கல்வி ஆண்டு - 1995**

**O/L, ஆண்டு - 10, 9, 8, 7, 6**

மாலை நேர வகுப்புக்கள் (3 – 6)
ஆரம்பம்: 05 - 12 - 1994 (திங்கள்) மாலை 3 மணி

சனி, ஞாயிறு வகுப்புக்கள் (8 – 2)
ஆரம்பம்: 10 - 12 - 1994 (சனி) காலை 8 மணி

திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. ஜே. ஆர். சூரி |
| கணிதம் | — | திரு. தயாளன் |
| சமூகக்கல்வி | — | திரு. கோபி |
| ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | — | திரு. திருப்பதி, திரு. பிரதீப் |
| சமயம் | — | திரு. சங்கர், திரு. கெங்கா |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன் |

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-9907)

---

## கல்வியின் கருவூலம் மட்டுமல்ல; பண்பின் விளைநிலமும் இதுதான்

# யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

ஆண்டுகள் 3 - 11 வரைக்கான புதிய அனுமதிகளை 5 - 12 - 1994இன் முன்னர் உறுதி செய்துகொள்ளுங்கள்.

(சி-9645)

---

## YARL HALL கல்வி நிலையம்

(திருமறைக்கலா மன்றம் முன்பாக) 93, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## பிரத்தியேக கல்வி நிலையம்

இல. 2, சீனிவாசகம் வீதி, கொட்டடி.

### கல்வியாண்டு 1995 புதிய வகுப்புகள்

ஆரம்பம்: **05-12-1994** திங்கள் மாலை 4-00மணி

ஆண்டு 4முதல் O/L வரை வகுப்புகள் நடைபெறும்

★ **விஞ்ஞானம்**
இரா. செல்வவடிவேல்
F. J. கருணைநாயகம்
K. கண்ணதாசன்

★ **கணிதம்**
S. வாமதேவன்
M. குமாரவேல்
S. அனுசுயா

★ **தமிழ்**
செ. கதிர்காமத்தம்பி
ஞான. திருக்கேதீஸ்வரன்
S. A. சிகாமணி

★ **சமூகக்கல்வி**
M. இக்னேசியஸ்
T. ROBERT
K. நாகேஸ்வரி

★ **ஆங்கிலம்**
T. சகாதேவன்
T. சௌந்தரபாண்டியன்

★ **வர்த்தகம்**
A. அகஸ்ரின்

★ விசேட ஆங்கில, சிங்கள வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
★ பிரத்தியேக விஞ்ஞான வகுப்புகளும் நடைபெறும்.

[33968]

---

## விவாஹ வரவேற்பு அழைப்பு

கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய குரு சிவஸ்ரீ ப. சச்சிதானந்த குருக்கள் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன்

**திவாகரன் (கண்ணன்)**

அவர்களுக்கும்

மாவை ஆதீனம் சிவஸ்ரீ சு. துரைச்சாமி குருக்கள் தம்பதிகளின் புத்திரி - சௌபாக்கியவதி

**கெஜலஷ்மி (சாந்தி)**

அவர்களுக்கும்

விவேகானந்தமேடு, கமலாமோடி மண்டபத்தில் **14-11-1994**இல் இனிது நடைபெற்ற திருமணத்தின் வரவேற்பு வைபவம் மணமகன் இல்லத்தில் கார்த்திகைத் திங்கள் **18**ஆம் நாள் (**04 - 12 - 1994**) ஞாயிற்றுக்கிழமை மாலை **3-00** மணியளவில் நடைபெறும். அத்தருணம் பந்துமித்திர சகிதம் வந்திருந்து புதுமணத் தம்பதிகளை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
சிவஸ்ரீ ப. சச்சிதானந்த குருக்கள் தம்பதிகள்.
சிந்தாமணி விநாயகர் ஆலயம், தச்சன்தோப்பு,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்,

(33959)

---

## MATHS CENTRE

NELLIADY

**A/L - 95** (கலை, வர்த்தகம்)

**DAY CLASS**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | ராஜேஸ்வரன் |
| கணக்கியல் | — | கலைச்செல்வன் |
| வர்த்தகம் | — | சிவப்பிரகாசம் |
| அளவையியல் | — | விக்கி, பிரபா |
| இந்துநாகரிகம் | — | ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — | கதிர்காமசேகரம், அமரசிவம் |

ஆரம்பம்: **05 - 12 - 1994** திங்கள் 8-30 a. m.

[33962]

---

உங்கள் குழந்தைகளுக்காக......
இப்பொழுதே உறுதியான அத்திவாரத்தை இடுங்கள்!

## நியூட்டன் அக்கடமி

அதற்கு வழிகாட்டும்!!

**ஆண்டு 1 முதல் O/L வரை புதிய வகுப்புகள் Dec. 5இல் ஆரம்பமாகிறது**

★ கட்டுப்பாடு
★ தன்னிகரற்ற ஆசிரியர் குழு
★ மாதாந்தப் பரீட்சைகள்

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| கணிதம் | — | எஸ். கருணாகரன் |
| விஞ்ஞானம் | — | இரா. அருட்செல்வம், இ. ராஜா |
| சமூகக்கல்வி | — | இரா. கணேஷ் |
| தமிழ் | — | புலவர் சிவா, எஸ். பரமேஸ்வரன் |
| ஆங்கிலம் | — | எஸ். சந்திரமௌலி, சிவசக்தி |
| வர்த்தகம் | — | எஸ். வேல்நம்பி |
| சமயம் | — | திரு. சங்கர் |

## நியூட்டன் அக்கடமி

(உயர்ந்த எதிர்காலத்தின் வழிகாட்டி)

இருபாலை வீதி, கோண்டாவில்.

(34018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## விளையாட திட்டமிடுவோம்

உடல் உறுதிக்கும் உள விருத்திக்கும் உதவுவது விளையாட்டுத்துறை.

விளையாட்டுத் துறையில் சர்வதேச, ஆசிய மட்டங்களை எட்டிக் கூடப் பார்க்க முடியாத நிலையில் ஸ்ரீலங்கா இருக்கின்றது என்றால், ஸ்ரீலங்காவின் தரத்தைக் கூட எட்டிப் பிடிக்க முடியாத நிலையில் தமிழீழத்தின் தேசிய மட்ட விளையாட்டுத்துறை இருக்கின்றது.

தனித்துவமான எமது விடுதலைப் போராட்டத்தின் மூலம், உலகையே வியக்க வைக்கும் போராளிகளை— போர் வீரர்களை — உலகத்தின்முன்னால் யதார்த்தத்தில் உருவாக்கிக் காட்டி, சாதனை படைத்து நிற்கும் தமிழீழம்— விளையாட்டுத் துறையில் சாதனை படைக்கும் வீரர்களை உருவாக்குவதில் பின் நிற்கின்றது என்றால் அது எமக்கு வெட்கமில்லையா?

தமிழீழத்தில் விளையாட்டுத் துறையின் தரம் உயரவில்லை என்றால் அது விளையாட்டு வீரர்களின் தவறன்று.

அவர்களை அத்துறையில் ஒழுங்கான முறையில் வழி நடத்த வேண்டிய விளையாட்டுத்துறை நிர்வாகிகளின்— சமூக வழிகாட்டிகளின்—சமுதாயச் சிற்பிகளின் தவறே அதற்குக் காரணம்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஆசிய சாதனையை நிலைநாட்டக் கூடிய ஓர் எதிர்வீரசிங்கத்தை உருவாக்கக் கூடிய நிலையில் யாழ்ப்பாணம்இருந்திருக்குமானால், அந்தத் திறமை அதற்குப்பின்னர் யாழ்ப்பாணத்துக்கு இல்லாமல் போனது ஏன்?

சமுதாய விருத்திக்கான முக்கிய கட்டமைப்பின் ஒரு பகுதியான விளையாட்டுத் துறை குறித்து உரிய சிரத்தை எடுக்கப்படாததே நாம் அத்துறையில் வீழ்ச்சியுற்றதற்குக் காரணமாகும்.

விளையாட்டுத்துறையை நிர்வகிக்க வேண்டியவர்கள் அத்துறையை வளர்க்காமல், தமது வளர்ச்சியைப் பற்றி மட்டும் சிந்திக்கும் மனப்பாங்கு, எம்மிடையே ஏற்பட்டதுதான் இந்த அவலநிலைக்குக் காரணமாகும்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போல, தேய்ந்து போய்க் கொண்டிருக்கும் விளையாட்டுத் துறையைக்கட்டி வளர்க்க மாவட்ட மட்டத்திலும், பாடசாலைகள் மட்டத்திலும் விளையாட்டு அபிவிருத்திக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க செயற்பாடு.

இந்தக் குழுக்களின் கீழ் இயங்கும் உப அமைப்புக்கள், தத்தமது விளையாட்டுக்கள் தொடர்பாக சில இலக்குகளை நிர்ணயித்து, அவற்றை எட்டிப் பிடிப்பதற்காகத் திட்டங்களைத் தீட்டி, சலிக்காது செயல் புரிய வேண்டும்.

விளையாட்டுத் தரத்தோடு விளையாட்டு மனப்பான்மையும் சமூகத்தில் வளர்வதை இந்த அமைப்புக்கள் உறுதி செய்ய வேண்டும்.

இந்த இலக்குகளை நாம் அடைவதற்கு—

விளையாட்டுத் துறையில் எமது கடந்த கால பெறுபேறுகள் பற்றி ஆய்வு நடத்துதலும், அவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு எதிர்கால செயற் திட்டங்களைத் தாயாரித்தலும் முக்கியமாகுகின்றன.

இந்த வகையில்—

மெய்வன்மைத் துறையில் யாழ். குடா நாட்டின் விருத்தி —வீழ்ச்சி பற்றிய ஓர் ஆய்வை எமது புகழ் பூத்த ஒலிம்பிக் வீரர் கலாநிதி எதிர்வீரசிங்கம் ஆரம்பித்திருக்கிறார்.

இன்னுமோர் ஐந்து ஆண்டு காலத்திற்குள்ளாவது அவரைப் போன்ற — சர்வதேச தரத்தை எட்டக்கூடிய — ஒரு சில வீரர்களையாவது உருவாக்கக் கூடிய நிலையை நாம் அடைவதற்கு அவரது ஆய்வும், அதன் விளைவாகத் தயாரிக்கப்படும் செயற்திட்டமும் எமக்கு உதவ வேண்டும்.

விளையாட்டுத்துறை வளர்ந்தால், மக்கள் வாழ்க்கையில் வெற்றி தோல்விகளை சமமாகக் கருதும் மனப்பான்மை வளரும். அதனூடாக பொறாமை மூலம் எழும் பல சமூகப் பிரச்சினைகளையும் தவிர்க்கலாம்.

# பேச்சுக்குரிய அம்சங்களை இனி ஆராய்வதானால் அன்றாடப் பிரச்சினை விவகாரம் என்னாயிற்று?

சந்திரிகாவைப் பிரதம மந்திரியாகக் கொண்டு, பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்து மூன்று மாதங்கள் கடந்து விட்டன. சந்திரிகா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்று மூன்று வாரங்கள் கடந்து விட்டன.

ஆயினும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு இன்னும் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை, நிலைமை முன்னேற்றம் கண்டிருக்கிறது என்று சொல்வதற்கு எதுவுமில்லை. தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்பது சந்திரிகாவின் நிலைப்பாடு. பொதுத் தேர்தலுக்கு முன்பிருந்தே அவர் அந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்!.

பிரதமராகப் பதவியேற்ற கையோடு, தமது எண்ணத்துக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், தமிழீழப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவர் முன்வந்தார். விடுதலைப் புலிகளும் சந்திரிகா நீட்டிய நேசக்கரத்தை நம்பிக்கையோடு பற்றிக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டார்கள். கடந்த ஒக்ரோபர் 13ஆம், 14ஆம் திகதிகளில் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை வெகு சுமுகமாக நடந்தும் முடிந்தது.

முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது

**அரசியல்**

தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படாவிடினும், இனப்பிரச்சினை சம்பந்தமாக அதுவரை நிலவிய இருண்ட காலத்தில் ஓர் ஒளிச்சுடராக அது விளங்கியது. மூடப்பட்டுக் கிடந்த சமாதானக் கதவு திறக்கப்பட்டதாகவும், சமாதானத் தீர்வை அடைவதற்கு ஓர் அத்திவாரம் போடப்பட்டதாகவும் சமாதான விரும்பிகள் அந்த முதலாவது கட்டப் பேச்சுவார்த்தையை நோக்கினர்.

இடையில் ஜனாதிபதித் தேர்தல் வந்தது. இலேசாகத் திறக்கப்பட்ட சமாதானக் கதவு மீண்டும் மூடப்பட்டு விடுமோ என்று சந்தேகப்படும் அளவுக்கு பாதகமான சூழ்நிலை தோன்றியது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற காமினி திஸாநாயக்காவின் கொலை சந்திரிகாவை ''அரசியல் திகில்'' அடையச் செய்தது. சமாதானத்தை விரும்பாத சக்திகளும், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதை விரும்பாத சக்திகளும், போரை நீடித்து அதன் மூலம் செல்வந்தராகிய, செல்வந்தராகுவதற்கு விரும்பிய கூட்டத்தினரும் கூட்டுச் சேர்ந்து அந்தக் கொலைச் சம்பவத்தைப் பயன்படுத்தி சந்திரிகாவை திணறடிக்கச் செய்தார்கள்!

*மனம் தளம்பிய சந்திரிகா*

உண்மையிலேயே அவர்கள் ஆடிய ஆட்டத்தைக் கண்

## ஏழுவாரம் கடந்தும் முடிவெடுக்க இயலாது அரசாங்கம் திணறுகிறது

டும், அவர்கள் மறைமுகமாகப் போட்ட அழுத்தங்களைக் கண்டும் சந்திரிகா மனப்பலவீன முற்றார்; நலிவடைந்தார். சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதா நிறுத்துவதா என்பதனை முடிவு செய்ய முடியாதவராக மனம் தளம்பினார் அவர்.

ஜனாதிபதித் தேர்தலில் மிகப் பிரமாண்டமான வெற்றி பெற்ற பின்னரும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று மக்கள் ஆணை கொடுத்த பின்னரும், அவருக்கு உண்டான அரசியல் திகிலும், அச்சமும் நீங்குவதற்கு மூன்று வாரங்கள் சென்றன!

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை மீண்டும் தொடங்குவது என்று கடந்த வாரமே அவரால் முடிவுக்கு வர இயன்றது. ஆனாலும் பேச்சுவார்த்தைக்கான திகதியை உடனடியாகத் தீர்மானிப்பதற்கு இயலவில்லை. அதற்குச் சில காரணங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் முதற்கட்டப் பேச்சுவார்த்தையை நடத்திய அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகள் குழுவின் தலைவராக விளங்கியவர் பாலபட்ட பெண்டி. அவர் அப்போது பிரதமரின் செயலாளராக இருந்தவர். இப்போது ஜனாதிபதியின் செயலாளராக மதிப்புயர்ந்த பதவியில் இருக்கிறார். எனினும் அப்போதும் சந்திரிகாவின் செயலாளர்; இப்போதும் சந்திரிகாவின் செயலாளர்.

ஆனால் அவரை மீண்டும் அரச பிரதிநிதிகளின் தலைவராக அனுப்புவதா அல்லது அவருக்குப் பதிலாக புதியவரைச் சேர்ப்பதா என்பதனை இன்னும் சந்திரிகா முடிவு செய்யவில்லை என்று அறியப்படுகிறது.

பாலபட்டபெண்டி இம்முறை அரச பிரதிநிதிகள் குழுவில் இடம்பெறாவிடில் திரு. லயனல் பெர்னாண்டோ குழுவின் தலைவராக நியமிக்கப்படலாம். சென்ற தடவையும் தம்மைத் தலைவராக்கவில்லை என்ற மனக்குறைபாடு லயனலுக்கு இருந்ததாகச் சொல்லப்பட்டது.

*முஸ்லிம் பிரதிநிதி*

இதேவேளை, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அரச பிரதிநிதிகள் குழுவில், முஸ்லிம்களின் நலன்களைக் கவனிக்கும் விதத்தில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் சந்திரிகாவிடம் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

பொதுத் தேர்தலிலும் சரி, ஜனாதிபதித் தேர்தலிலும் சரி தமக்குக் கிடைத்த முஸ்லிம்களின் வாக்குகளை மனதிற் கொண்டு, அவர் அரச பிரதிநிதிகள் குழுவில் முஸ்லிம் பிரமுகர் ஒருவரையும் சேர்ப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இராணுவத் தரப்பில் இருந்தும் அரச பிரதிநிதிகள் குழுவில் ஒருவரைச் சேர்க்க வேண்டும் என்ற கருத்து இராணுவ வட்டாரங்களில் இருந்து எழுந்திருக்கிறது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இராணுவத்தினரைப் பகைப்பதில்லை என்ற போக்கையே சந்திரிகா கடைப்பிடிக்கத் தொடங்கி உள்ளார். பாதுகாப்பு அமைச்சும், முப்படைகளும் வேறு ஒருவரின் அதிகாரத்தின் கீழ் இருந்தபோது, இராணுவம் அரசியல் முடிவுகளுக்கு எதிராக நடக்கத் துணிவதாகக் கண்டித்தவர் சந்திரிகா.

இராணுவம் தான் நினைத்தது போல செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது; நாம் அதற்கு இடம்கொடுக்க மாட்டோம்— என்று அன்று கூறிய சந்திரிகா, இன்று இராணுவத்தை அனுசரித்துப் போக முடிவு செய்திருக்கிறார்! கதிரைக்கு ஏற்பக் கருத்தை மாற்றும் தன்மையா இது?

அரசியல் பேச்சுவார்த்தைகளில் இராணுவ அதிகாரிகளுக்கு என்ன வேலை? சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு இராணுவத் தரப்பினர் வருவது என்ன பொருத்தம்? விடுதலைப் புலிகள் அதனைவிரும்புவார்களா, ஏற்பார்களா? — இந்தக் கேள்விகளுக்கு விடைகள் கண்டுபிடித்து ஒரு முடிவுக்கு வர முடியாமல் சந்திரிகா தலையைப் பிசைவதாகத் தெரிய வருகிறது!

அழுத்தங்கள், கோரிக்கைகள், கருத்துக்கள் எவ்வாறு இருந்த போதிலும், தமக்கு நம்பிக்கையானவர்களையும், தனது சிந்தனையுடன் ஒத்த கருத்துடையவர்களையுமே சந்திரிகா அரச பிரதிநிதிகள் குழுவிற்கு நியமிப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

*சிக்கல் ஏன்?*

மேலும், விடுதலைப் புலிகளுடனான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட வேண்டிய அம்சங்கள் எவை என்பதனையும் முடிவு செய்வதில் அரசுக்கு சிக்கல் நிலை தோன்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து முதலில் பேசி, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது. அதன் பின்னரே அடிப்படைப் பிரச்சினை — அரசியல் பிரச்சினை — குறித்துப் பேசி ஒரு தீர்வை எட்டுவது இதுவே முதற்கட்டப் பேச்சின் போது இணங்கப்பட்ட ஏற்பாடு.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரண்டு பக்கமுமே அக்கறையாக இருந்தன. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை நீக்கி அவர்களின் உள்ளங்களை வென்றால் விடுதலைப் புலிகளிடம் இருந்து மக்களை ஓரளவேனும் பிரித்துவிடலாம் என்ற உபாயம் கருதியே சந்திரிகாவும் மக்கள் பிரச்சினைக்கு முதலிடம் கொடுக்கிறார் என்று அப்போது விமர்சிக்கப்பட்டது.

எதுவோ, இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் பேசப்பட வேண்டிய அம்சங்கள் குறித்துப் புதிதாக அரசு ஆராய வேண்டிய தேவை என்ன? தமிழ் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கும் கஷ்டங்களை, துன்பங்களை, நிம்மதியற்ற நிலையை நீக்குவதற்கான ஏற்பாடுகளை, அவை சம்பந்தமான அம்சங்களை ஆராய்வதே பொருத்தமானதாகும்.

அவற்றைத் தவிர்த்து அடிப்படைப் பிரச்சினை குறித்துப் பேசுவதனாலேயே பேச்சுவார்த்தைக்குரிய அம்சங்கள் குறித்துப் புதிதாக முடிவெடுக்க நேரிடும். ஆனால் எடுத்த எடுப்பிலேயே அரசியல் பிரச்சினைகளுக்குரிய அம்சங்களை ஆராய்வதற்கு அரசு விரும்பும் என்று சொல்வதற்கில்லை.

அவ்வாறாயின் அன்றாடப் பிரச்சினைகள்சம்பந்தப்பட்ட அம்சங்களான போக்குவரத்துத் தடை நீக்கம், முழு அளவிலான பொருளாதாரத் தடை நீக்கம், போர் நிறுத்தம் ஆகியவற்றையே சிக்கலான விடயங்களாக அரசு கருதுகிறதா?

ஆனால் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் மேற்சொன்ன கேள்விக்குப் பாதகமான ஒரு நிலைப்பாட்டையே காட்டுகின்றன. பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் என்பதில் வர்த்தக வட்டாரங்களில் இருந்து அரசுக்கு அழுத்தம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

*அரசுக்கு அழுத்தம்*

மக்களுக்குத் தேவையான சகல பாவனைப் பொருள்களையும் தமிழ்ப் பகுதிகளுக்கு தாராளமாக எடுத்துச்செல்வதற்கு போக்குவரத்துத் தடையை நீக்க வேண்டும் என்ற அழுத்தமும் அரசுக்கு இருப்பதாக அறியப்படுகிறது.

பொருளாதார, போக்குவரத்துத் தடைகள் நீக்கப்பட்டால் போரைத் தொடர்வதில் பயனில்லை என்ற கருத்து அரசாங்க வட்டாரங்களைவிட இராணுவ வட்டாரங்களில் மேலோங்கி நிற்பதாகக் கூறப்படுகிறது. மேற்சொன்ன இரண்டு தடைகளும் நீக்கப்பட்டால் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக மேலும் வளர்ந்து விடுவார்கள் என்ற அச்சம் இராணுவத் தரப்புக்கு உண்டு எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆகையால் ஆராயப்பட வேண்டிய அம்சங்கள் என்று அரசு கூறுவது பொருளாதாரத் தடை நீக்கம்,போக்குவரத்துத் தடை நீக்கம், போர் நிறுத்தம் ஆகிய மூன்றையுமே சுற்றிச் சுழல்கிறது என ஊகிக்கலாம்.

ஆனால் இந்த அம்சங்களை ஆராயாமல் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது என்ற முதலாவது பாகத்தைப் பூர்த்தி செய்வது மிகவும் கடினமாக இருக்கும்.

முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்று ஏழு வாரங்கள் ஆகிய பின்னரும் இவ்விடயங்கள் குறித்து அரசுக்கு முடிவு எடுக்க இயலவில்லையெனின் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காண்பது எங்ஙனம்?

அரசு நினைத்தால் மிக இலகுவாக நடைமுறைப்படுத்தக்கூடிய இந்த அம்சங்களையே சிக்கலாக அது கருதுமானால், அடிப்படை அரசியல் விடயங்களில் முன்னேற்றம் காண்பது எந்தளவுக்குச் சாத்தியமாகும்?

-உதயகாந்தன்-

★

## அரசியல் தீர்வு காணப்படாவிடின் அரசை வீழ்த்துவதற்கு தயங்கோம்

### கூட்டணி எம்.பி.கூறுகிறார்

''தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அரசமைப்பை மாற்ற அரசு தவறுமேயானால் இந்த அரசை வீழ்த்த நாம் தயங்க மாட்டோம்.''

மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராசசிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏறாவூர் தெற்கு ப. நோ. கூ. சங்கத்துக்கான புதிய கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசியபொழுதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த வியாழக்கிழமை நாங்கள் ஜனாதிபதி திருமதி சந்திரிகாவைச் சந்தித்து தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் வலியுறுத்தினோம் என்றும் அவர் கூறினார் (க)

### ஐ. தே. கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது பெறுபேறுகள், நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய விவரங்களும் இந்தக் கோவைகளில் பதியப்படும் என்றும்— கட்சி புதிய நியமனங்களைச் செய்யும் போது இக்கோவைகள் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### முதலில்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசமைப்பு— அத்தகைய ஜனாதிபதி அந்த அரசமைப்பையே தூக்கி வீசும் போது அதனைக் கட்டுப்படுத்த கையாலாகாததாக அல்லது போதிய அதிகார மற்றதாக இருப்பதையும் —

அவ்வாறு தற்போதைய அரசமைப்பைத் தூக்கி வீசி புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு மரபுமுறையற்ற முறைகளை ஜனாதிபதி நாடும் போது, சர்வதேச சமூகத்தில் தனக்கு ஏற்படக்கூடிய கெட்ட பெயரைத் துடைப்பதற்கேற்ற வாய்ப்பான நடவடிக்கைகளை அவர் எடுப்பதற்கு, வசதியான ஏற்பாடுகளை கொண்டிருப்பதையும் —

இந்தக் கட்டுரைத் தொடரின் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம். ✶

## தமிழ் நூல்களுக்கான சாகித்திய பரிசு முடிவுகள்

கொழும்பு, டிச. 4

1992 ஆம் ஆண்டில் வெளிவந்த தமிழ் இலக்கியப் படைப்புகளுக்கான 'சாகித்தியப் பரிசு'முடிவுகளை இந்து சமய கலாசாரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

விவரம் வருமாறு:-

நாடகம்: அகளங்கன் (நா. தர்மராசா) எழுதிய 'அன்றில் பறவைகள்'

சிறுகதை: க. சட்டநாதன் எழுதிய ''உலா'', எஸ். எல். எம். ஹனிபா எழுதிய'மக்கத்துச் சால்வை'

கவிதை: இ. முருகையன் எழுதிய 'நாங்கள் மனிதர்'

இலக்கியத் திறனாய்வு: கலாநிதி சி. மௌனகுரு எழுதிய 'பழையதும் புதியதும்'

சிறுவர் இலக்கியம்: அம்பி (இ. அம்பிகைபாகன்) எழுதிய 'கொஞ்சும் தமிழ்'

சமய மெய்யியற் துறை: கலாநிதி க. அருணாசலம் எழுதிய 'சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள்.

இட வரலாறும் பண்பாடும்: எ.என்.எம். ஷாஜஹான் எழுதிய ''புத்தளம் வரலாறும் மரபுகளும்''

கலாசார சமய அலுவல்கள் அமைச்சினால் இம்மாதம் நடத்தப்படும் தேசிய சாகித்திய விழாவில் பரிசுகள் வழங்கப்படும். [க]

## வீடமைப்பு கடன் நிலுவை

அச்சுவேலி, டிச 4

வீடமைப்புக்கடன் பெற்றவர்களிடமிருந்து வீடமைப்பு கடன் நிலுவையை அறவிடுவதற்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கடன் பெற்றவர்கள் இதுவரை காலமும் கட்டாதிகடன் நிலுவையை செலுத்த கடன் ஒப்பந்தத்தை நிறைவு செய்து கடன் ''காணி உறுதியை'' பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்படுகின்றது. (க-1)

## தமிழ் வர்த்தகர் சயனைட் அருந்தி மரணம்

கொழும்பு, டிச. 4

கொழும்பு செட்டித் தெருவைச் சேர்ந்த நகை வர்த்தகரான எம். எஸ். நடராஜா என்பவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பு செட்டித்தெருவில் அவர் பத்து லட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்த கடை ஒன்றை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியுடையது என மதிப்பீடு செய்து அவருக்கு 11 லட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததாகவும்—

இதனால் மனமுடைந்த அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்பட்டது. (உ)

## ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' ஒப்பந்தத்தை நிராகரிக்க கோரிப் பிரேரணை

கொழும்பு, டிச 4

புத்தளம் இரணவிலவில் ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' வானொலி நிலையத்தை அமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா — அமெரிக்க அரசுகளுக்கு இடையில் 1991 டிசம்பரில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை நிராகரிப்பதற்கு, நாடாளுமன்றத்தின் அனுமதியைக் கோரும் தனிநபர் பிரேரணை ஒன்றுக்கு அரச தரப்பு எம். பி. ஒருவர் முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்.

பொ. ஐ. முவின் தேசியப் பட்டியல் எம்.பியும், லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளருமான பற்றி வீரக்கோனே இந்த முன்னறிவிப்பைச் செய்திருக்கிறார். (உ)

## மருந்து வந்துசேர்ந்தது

யாழ்ப்பாணம், டிச. 4

வட. பிராந்திய சுகாதார திணைக்களத்திற்கு நாலாம் காலாண்டுக்குரிய மருந்து வகைகள் அனைத்தும் வந்து சேர்ந்துள்ளன.

மருந்து வகைகள் யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட தடுப்பூசி மருந்துவகைகளும் கப்பலில் வந்துள்ளன. (க-17)

## அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஐ.தே.க முட்டுக்கட்டையாக இராது!

### ஏ.சீ.எஸ். ஹமீத் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச 4

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முட்டுக்கட்டையாக இராது.

—இவ்வாறு முன்னாள் வெளி விவகார அமைச்சரும், ஐ. தே. கவின் முக்கிய பிரமுகருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்பதையே நாட்டு மக்கள் அனைவரும் விரும்புகின்றனர்.

பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று காணப்படாவிட்டால் நாட்டின் எதிர்காலம் சுபிட்சமாக அமையாது. நாட்டில் அமைதி நிலவுவது இதற்கு அவசியம்.

வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்காமல் புதிதாக கைத்தொழில் மயமான நாடு என்ற அந்தஸ்தை நாடு இந்த நூற்றாண்டில் அடைய முடியாது.

யுத்தம் நடக்கும் வரை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதில் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.

எனவே யுத்தத்துக்கு முடிவு கட்டப்பட்டு சமாதான சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியம்.

இனப்பிரச்சினைத் தீர்வில் விடுதலைப் புலிகளின் பங்கு முக்கியமானது. அவர்களைத் தவிர்த்துவிட்டுக் காணப்படும் எந்த ஒரு தீர்வும் நிரந்தரமானதாக இருக்காது.

இவ்வாறு ஹமீத் மேலும் கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு ஒழுங்கை, இல. 46, பரப்பு 2, ஆறு அறைகள் கொண்ட எல்லா வசதிகளுடனும் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
ச. ஆனந்தகரன்,
'ஆறுபடை வீடு'',
35, விபுலானந்தர் வீதி, புங்கன்குளம்.
(33946)

## விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்.

### கல்வி ஆண்டு 1995

ஆண்டு 6 - 11 வரை

| | |
|---|---|
| கணிதம் | P. ஜெயக்குமார்<br>D. பிரபா |
| விஞ்ஞானம் | J. J. கொலின்ஸ்<br>T. தவச்செல்வன் |
| சமூகக்கல்வி: | க. கோபி<br>மரியதாஸ்<br>M. பிரபா |
| தமிழ்: | S. S. தங்கராஜா<br>ஜெயபாலன் |
| வர்த்தகம்: | இ. ஜீவா |
| ஆங்கிலம்: | சௌந்தர பாண்டியன்<br>சங்கர் |

ஆரம்பம்: 04 - 12 - 1994
ஞாயிறு காலை 6-30மணி
(சி/9928)

## எலைற் கல்வி நிறுவனம்

99, மானிப்பாய் வீதி (ஐந்து சந்தி), யாழ்ப்பாணம்

### கல்வியாண்டு - 1995

ஆண்டு 4 முதல் O/L வரையான வகுப்புகள்

விசேட புலமைப் பரிசில் வகுப்புகள்

ஆரம்பம் 05 - 12 - 1994
திங்கள் பி. ப. 3-00மணி

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. V. ஜெயக்குமார் |
| விஞ்ஞானம் | — | திரு. V. S. சங்கர் |
| தமிழ் | — | திரு. T. ராமதாஸ் |
| வர்த்தகம் | — | திரு. T. ராஜன் |
| சமூகக்கல்வி | — | திரு. A. ஆர்த்திகன் |
| ஆங்கிலம் | — | பிரபல ஆசிரியர் |
| சமயம் | — | திருமதி S. ஜெயா |

★ திறமை, தகுதி, அனுபவம் மிக்க ஆசிரியர் குழு
★ மாதாந்த தவணை ரீதியான பரீட்சைகள்
[34026]

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

### கல்வி ஆண்டு - 1995

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையிலான வகுப்புக்கள்

ஆரம்பம்: 05 - 12 - 1994
திங்கள் 12-00 மணி

எமது
தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

✶ விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
சண்
ஆனந்தி

✶ கணிதம்
இந்திரன்
மகேந்திரன்
பரா
வாமதேவன்

✶ தமிழ்/சமயம்
பண்டிதர்
என். எஸ். மணியம்
யோகராணி

✶ சமூகக்கல்வி
வேலா
சிவனேசன்
மயூரன்

✶ ஆங்கிலம்
மகாலிங்கம்
ரமேஸ்
தர்மலிங்கம்

✶ வர்த்தகம்
நாதன்

புலமைப் பரிசில் வகுப்பு
கணிதம் — S. S. பிள்ளை
தமிழ் — திருவாசகநாதன்
அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
[சி-9649]


## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிச. 4
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் சிறீ பாஸ்கரன் விளையாட்டரங்கில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 1-30 மணி: - ஞானமுருகன் வி. க. எதிர் யங்ஸ்ராரர்.

★ 2-30 மணி: - விநாயகர் ஐ.வி.க. எதிர் பொற்பதி 'ஏ'

★ 3-30 மணி: -அறிவொளி வி. க. எதிர் யங்றோயல்'ஏ'
(உ-20)

★ ★ ★

யாழ். மிட்ரவுண் றோற்றக்ற் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் —

சென். மேரீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜங்கென்றீஸ் விளையாட்டுக் கழகமும் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழகம் மோதுகின்றன. (இ-4)

## அரச அதிபர் விரைவில் வந்து பொறுப்பேற்பு

யாழ். அரச அதிபராக சென்ற மாதம் முதல் நியமனம் பெற்றிருக்கும் திரு.கே. பொன்னம்பலம் எதிர்வரும் 15ஆம் திகதியளவில் யாழ்ப்பாணம் வந்து தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்ளுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிளிநொச்சி அரசஅதிபராக வவுனியா அரச அதிபர் திரு. தில்லை நடராசாவையும் —

வவுனியா அரச அதிபராக மன்னார் அரச அதிபர் திரு. கே. கணேசையும் — மாற்றுவதற்கு அமைச்சு மட்டத்தில் கொழும்பில் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-4)

## பனாமா நாட்டுக் கப்பல் தடுத்து வைக்க உத்தரவு

இருபத்திரண்டு இலங்கையர் உட்பட 53 கப்பல் ஊழியர்களின் சார்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை அடுத்து—

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் ''ஓவேர்ல்ட் லைன்ஸ்'' என்ற பனாமா நாட்டுக் கப்பலைக் கைப்பற்றி தடுத்து வைக்கும்படி கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இக்கப்பலில் பணியாற்றிய 22 இலங்கையர் உட்பட 53 பேரையும் சட்டவிரோதமான முறையில் வேலையிலிருந்து நீக்கியமை மற்றும் சம்பளம், மேலதிக நேர வேலை, விடுமுறைக்கான கொடுப்பனவு ஆகியவை தொடர்பான நிலுவைகளைச் செலுத்தத் தவறியமை போன்றவற்றுக்கு நிவாரணம் கோரியும்—

கொழும்பில் வைத்து வேலை நீக்கம் செய்யப்பட்டோர் தத்தமது நாடுகளுக்குச் செல்வதற்கு பயணப்படி செலுத்துமாறு உத்தரவிடக் கோரியுமே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### ஆந்திரா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பு இருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படும் தமிழ்நாடு மாநிலத்துக்கு அருகில் ஆந்திரப் பிரதேசம் உள்ளது.

ஸ்ரீலங்காவின் வடக்கு-கிழக்கில் இந்தியப் படைகள் நிலை கொண்டிருந்த காலத்தில் அவர்களுக்கு எதிராக பல வெற்றிகரமான நிலக் கண்ணிவெடித் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கண்ணிவெடித் தாக்குதலில் நிபுணத்துவம் பெற்றிருக்கும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையது எனக் கூறப்படும் — தடை செய்யப்பட்ட — நக்ஸலைட் தீவிரவாதக்குழுவான மக்கள் போராட்டக்குழு(பி.டபிள்யூ.ஜி) என்ற அமைப்பே கரீம் நகரில் பாதுகாப்புப் படைகளை இலக்கு வைத்து தீவிரமாகச் செயற்பட்டு வந்தது என இந்தியாவிலிருந்து வெளியான ஏ. எவ். பி. செய்தி ஒன்று குறிப்பிட்டது.

இத் தீவிரவாதக் குழு கண்ணிவெடித் தாக்குதல்களை அறிமுகப்படுத்தியிருப்பது அவர்களின் பலத்தை பல மடங்கு அதிகரித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல சர்வதேச புரட்சி இயக்கங்களுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இருப்பதாக நம்பப்படுகின்றது.

— இவ்வாறு 'த ஐலண்ட்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தமிழகத்தில் புலிகள் ஊடுருவல்

வல்வெட்டித்துறையிலிருந்தும் பருத்தித்துறையிலிருந்தும் புறப்பட்ட விடுதலைப் புலிகளின் குழு ஒன்று தமிழ் நாட்டுக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல் கிடைத்திருப்பதை அடுத்து தமிழ்நாடு பொலீஸாரும், புலனாய்வுத் துறையினரும் உஷார் படுத்தப்பட்டிருப்பதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தியக் கரையோரப்பகுதியை இந்தியக் கடற்படையினர் சுற்றி வளைத்துள்ளனர் என்றும்—

தமிழகக் கிராமங்களில் நடமாடும் இளைஞர்கள் தொடர்பாக விழிப்புடன் செயற்படும்படி பொலீஸார் பணிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

சென்னையிலும் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் வாகனங்களை பொலீஸார் அடிக்கடி மறித்துச் சோதனையிடுகின்றனர் என்றும்—

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### தெற்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
றும்— அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பிந்திய செய்திகளின்படி—
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே இது விடயத்தில் நேரடியாக அக்கறை காட்டிய தன் பேரில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்தது. (அ-4)

### தீர்வு காண்பதில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஐஸ மென் கூறினார்.

சந்திரிகா அரசின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், நாட்டின் பொருளாதாரத் திட்டங்களுக்குத் தடையாக விளங்கும் என்றும் —

நுகர்வோர் நன்மை கருதி அரசு கொண்டுவந்துள்ள விலைவாசி உச்ச வரம்புகள் உற்பத்தியாளர்களுக்குப் பாதிப்பை உண்டுபண்ணும் என்றும் —

அதிகரிக்கப்பட்ட மானியச் சலுகைகள் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை அதிகரிக்கச் செய்யும் என்றும் — உலக வங்கி கருதுவதாக பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-ஐ)

### ஐ. தே. கவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
'கட்சியின் தலைவர் ஜனாதிபதி பதவியை வகித்த போதே — அவர் கட்சிப் பணிக்கு முழு நேரத்தையும் செலவிட முடியாது என்பதால் — துணைத் தலைவரைக் கட்சி நியமித்து வந்தது துணைத் தலைவர் பதவிக்கு பிரதமர் நியமிக்கப்பட்டார்.

''ஆனால் இப்போது நிலைமை அப்படியல்ல; கட்சித் தலைவர் தமது நேரத்தை கட்சிக்குச் செலவிடக் கூடியதாக உள்ளது. அத்துடன் அவர் இல்லாத நேரத்தில் கட்சியின் தவிசாளர் (ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீட்) அவரின் வேலைகளைக் கவனிக்கலாம். எனவே துணைத் தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை 'இல்லை''.

— இவ்வாறு காமினி அத்துக்கோறளை தெரிவித்தார்.

கட்சியின் துணைத் தலைவர் பதவிக்கு விஜேபால மெண்டிஸ், டிரோன் பெர்னாண்டோ, எம். எச். முகம்மது, சுசில் முனசிங்க ஆகிய நால்வரிடையே கடும்போட்டி நிலவுவதாக முன்னர் செய்திகள் வெளியானது தெரிந்ததே. (உ)


## புதிய தொழிற் பயிற்சி

FUNDAMENTAL ELECTRONICS
[அடிப்படை இலத்திரனியல்]

ஆரம்பம்: 5-12-1994

★ றேடியோ Electronics செய்முறையுடன் கூடிய விரிவுரைகள்
★ விடுமுறைக் கால வகுப்புக்கள்
★ இலகு விரிவுரைகள்

விவரங்களுக்கு:
North Ceylon Technical Institute
14 St PETER'S LANE,
JAFFNA.
(சி-9636)


## கண்ணீர் அஞ்சலி

சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ்
(மேலதிகச் செயலர் - கல்வி, கலாசார அமைச்சு
பணிப்பாளர் - கிராம அபிவிருத்தித் திணைக்களம்
முன்னாள் பிரதிச் செயலர் - உள்துறை அமைச்சு
வடக்கு — கிழக்கு மாகாண சபை

முன்னாள் உதவி அரசாங்க அதிபர்
கரவெட்டி

அன்னாரின் மறைவையிட்டு எங்கள் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதேசச் செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்

பிரதேச செயலகம்,
கரவெட்டி.
(8057)

## இதய அஞ்சலி

அமரர்
சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ் S. L. A. S
(வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிகச் செயலரும் உட்துறைப் பிரதிச் செயலரும்)

தமிழ் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்ட அமரர் கடந்த மாதம் யாழ். நகர் வந்து இம்மாவட்டத்தின் கல்வித் தேவைகளை நேரிடையாகத் தெரிந்து சென்றார். வகுத்த திட்டங்களுக்கு செயலுருவம் கொடுக்கும் காலை காலன் அவரைக் கவர்ந்து சென்ற செய்தி எம் உள்ளத்தில் நீங்காத வேதனையைத் தருகின்றது. அமரரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதே பொழுதில் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைஞ்சுகின்றோம்.

யாழ் - நல்லூர் கல்விக்கோட்ட
அலுவலர்கள், அதிபர்கள்,
ஆசிரியர்கள் மாணவர்கள்

நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(சி/9853)

## குடிபோதை அறிவிப்பால் விமானத்தில் பரபரப்பு!

### பயணிகளுக்கு ஏற்பட்ட அனுபவம்

கொழும்பு, டிச. 4
கடந்த வாரம் கொழும்பிலிருந்து சென்னைக்குப் புறப்பட்ட 'ஏயர்லங்கா' விமானத்தில், விமானம் புறப்பட்டு 30 நிமிட நேரத்தின் பின் — நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது — திடீரென விமானம் அவசரமாக தரையிறக்கப்படப் போவதாக அறிவிக்கப்பட்டது.

கலவரமடைந்த பயணிகள் அவசர அவசரமாக ஆபத்துக்கால ''ஜாக்கெட்டுகளை'' அணிந்தனர்; அவசரமாக விமானம் தரையிறங்கப் போவதை பதற்றத்துடன் எதிர்பார்த்திருந்தனர்.

எனினும் சில நிமிடங்கள் கழித்து —

முன்னைய அறிவிப்பை உதாசீனம் செய்யும்படியும், விமானம் சென்னையை நோக்கி ஆபத்து ஏதுமின்றிச் சென்றுகொண்டிருப்பதாகவும் விமானி அறிவித்தார்.

குடிபோதையில் இருந்த ஊழியர் ஒருவரே இத்தகைய அறிவிப்பை முதலில் விடுத்திருக்க வேண்டும் என்றும் —

இதுபோன்ற அறிவிப்பை அவர் ஆரம்பத்திலும் விடுத்தபோதிலும், அது தெளிவாக இருக்கவில்லை என்றும் பயணிகள் தெரிவித்தனர். (உ)

### புதியவர்களை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களிலும், வாக்காளர்களிலும் பெரும்பான்மையானவர்கள் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் பிறந்த புதிய தலைமுறையினர் என்னைப் போன்றவர்கள். இலவசக் கல்வியைப் பெற்றவர்கள். எனவே அவர்கள் பொறுப்பு வகிக்கும் கட்சியாக ஐ தே. க. மாற்றப்பட வேண்டும்.

பெரும்பான்மையினராக இளைய தலைமுறையினர் இருந்த போதும் கட்சியின் உயர் பதவிகளை இதுவரை வயதில் முதியவர்களே வகித்து வந்துள்ளனர்.

முதியவர்களை தொடர்ந்தும் வைத்துக் கொண்டே புதியவர்களைக் கொண்டு— அவர்களுக்குப் பொறுப்புக்களை வழங்கி— அவர்களின் கருத்துப்படி முன்னேற்றப் பாதையில் செல்லும் கட்சியாக ஐ. தே. கவை நான் மாற்றுவேன்.

இவ்வாறு ரணில் மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### இராசையா ஜெயக்குமார்

குரும்பசிட்டியைச் சேர்ந்த இராசையா ஜெயக்குமார் (ஜெயம்குட்டி) சுவிஸில் காலமானார்.

அன்னாரின் மரணச்சடங்கு இன்று 4 - 12 -94 சுவிஸ் நாட்டில் நடைபெறும்.

சுதுமலையில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி அன்னபூரணம் இராசையா
(தாய்)

மதவடி வீதி
சுதுமலை.
(34017)

### திருமதி வனசமலர் சண்முகநாதன்

திருமதி வனசமலர் சண்முகநாதன் காலமானார்.

அன்னார் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், உரும்பராயைச் சேர்ந்த குமாரசுவாமி - தங்கலஷ்மி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி - திருமதி நல்லம்மாவின் அன்பு மருமகளும், பிரமிளா (கனடா), சகிலா (வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி), நிகிலா (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் - ஆங்கிலம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், மகாலிங்கம் (மகான்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கணேஸ்வரனின் (கனடா) அன்பு மாமியாரும், கௌதத்தின் (கனடா) அன்பு அம்மம்மாவும், கருணாதேவி, ஜெயமலர் (நந்தா), ஜெயந்தி (கனடா), பிரேமா (நோர்வே), மஞ்சுளா (கனடா), மிதிலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோகரபூபன் (மனோகரன் & வெற்றிவேல்), சண்முகநாதன் (மனோகரன் & வெற்றிவேல்), ரூபகுமார் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (நோர்வே), செல்வன் (கனடா), ரவிக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந. மகாலிங்கம் (மகான்)
(மைத்துனர்)
ஆ. குமாரசுவாமி
(தகப்பன்)

10/2, சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி.
(34032)

### திருமதி கமலாதேவி பத்மநாதன்

திருமதி கமலாதேவி பத்மநாதன் அவர்கள் காலமானார்.

இவர் தம்பிமுத்து, பத்மநாதன் (நீர்ப்பாசன இயந்திர இயக்குநர் விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி) அவர்களின் அன்புத் துணைவியும், செல்விகள் மாதங்கி, மைத்ரேயி (சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பண்டிதர் மு. அருணாசலம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற தம்பிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் கலாநிதி. குமாரசாமி (கனடா), போதரத்தினம் (லண்டன்), திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம், திருமதி லீலாதேவி ஆலாலசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), திருமதி இசைஞானி சுந்தரலிங்கம் (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)—

திருமதி யோகாம்பிகை பொன்னுத்துரை, திருமதி ருக்மணிதேவி பாலராமன், திருமதி போதராணி மகேந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணியளவில் 150/125 நெடுங்குளம் வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. செ. பத்மநாதன்
(கணவர்)
(34031)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டி[illegible] கத்திலுள்ள அச்சகத்தில் 04—12—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org